**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.133/2025**

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சத்தியராஜ் | Father's Name | : | மணி |
| Village | : | மன்னார்குடி | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 39 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 26th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மன்னார்குடி போக்குவரத்து காவல் பிரிவில் தலைமை காவலராகவும் அயல்பணியில் சென்னை மத்திய நுண்ணறிவு பிரிவில் பணியாற்றி வருகிறேன். கடந்த 02.09.2024 அன்று திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது மாலை 5.00 மணியளவில் திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு ஆய்வாளர் கார்த்திகா தலைமையில் தலைமை காவலர்கள் தனசேகரன், சுரேஷ் ஆகியோருடன் ரோந்து பணியிலிருந்தபோது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:34:50 +0530

எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி சேவிக்காடு மருத்துவமனை தெருவில் உள்ள ஒரு வீட்டில் பரமசிவம் என்பவர் சாராயம் விற்பதாக கிடைத்த தகவலின் பேரில் அந்த வீட்டிற்கு சென்றபோது அங்கிருந்து தப்பிக்க முயன்றவரை விசாரிக்க தன் பெயர் பரமசிவம் எனவும் இது தன் வீடு என சொன்னதன் பேரில் அவரது வீட்டை சோதனை செய்தபோது 100 லி. பிடிக்க கூடிய 2 பேரலில் ஊறல் இருந்தது. அது தவிர 3 ஒரு லிட்டர் பாட்டில்களில் 2 பாட்டில்களில் முழு அளவிலும் ஒரு பாட்டிலில் பாதியளவும் சாராயம் இருந்தது. அதை நுகர்ந்து பார்த்தபோது ஒருவித விஷ வாடை வீடியது. ஒரு டியூப்புடன் ஒரு பாத்திரமும் ஒரு பெரிய மற்றும் ஒரு சிறிய 2 அலுமினிய பாத்திரங்களும் ஒரு கேஸ் அடுப்பும் 20 லி. பிடிக்க கூடிய வெள்ளை நிற வெற்று கேன் ஒன்றும் இருந்தன. அவரை விசாரித்தபோது ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அப்போது மாலை 5.15 மணியிருக்கும். 6.15 மணியளவில் ஒரு கேஸ் அடுப்பு, டியூப்புடன் கூடிய ஒரு பாத்திரம், 2 அலுமினிய பாத்திரங்கள், 20 லி. பிடிக்க கூடிய வெள்ளை நிற வெற்று கேன் 1, சாராய ஊறலுடன் இருந்த 100 லி. பிடிக்க கூடிய 2 பேரல்கள், 1 லி. பிடிக்க கூடிய 3 பாட்டில்கள் ஆகியவை இருந்தன. அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆகவும் மேற்படி அயிட்டங்கள் சா.பொ.1 முதல் சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:34:55 +0530

பேரல்களில் இருந்த ஊறலை 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் மாதிரிக்காக எடுக்கப்பட்டு SHO வசில் வைக்கப்பட்டது. மேற்படி 2 கண்ணாடி பாட்டில்கள் ஏற்கனவே சா.பொ.6, சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 6.45 மணிக்கு மீதமுள்ள ஊறல்கள் மற்றும் 2 பேரல்களை அந்த இடத்திலேயே அழிக்கப்பட்டது. அந்த அழிப்பு மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதே இடத்தில் ஒரு லிட்டர் பிடிக்க கூடிய 3 பாட்டில்களில் இருந்த சாராயத்திலிருந்து 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் மாதிரிக்காக எடுக்கப்பட்டு SHO வசில் வைக்கப்பட்டது. மேற்படி 2 கண்ணாடி பாட்டில்கள் ஏற்கனவே சா.பொ.8, சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சா.பொ.6 முதல் சா.பொ.9 ன் புகைப்படம் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், அழிப்பு மகஜர் தயாரிப்பு, எதிரி கைது ஆகிய நடைமுறைகள் முடிவடைந்த பிறகு காவல் நிலையம் சென்று முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. முதல் தகவலறிக்கை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:35:24 +0530

பதிவு செய்த நேரம் 02.09.2024 இரவு 8.30 மணி என்றால் சரி. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்லப்படும் நேரம் 02.09.2024 அன்று மாலை 5.15 மணி என்றால் சரி. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு கு.எண் 473/2024 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ஒப்புதல் வாக்குமூலம் வழக்கிற்காக எதிரிக்கு எதிராக காவல் துறையினரால் ஜோடிக்கப்பட்டது என்றால் தவறு. அதனால்தான் அன்றைய தினம் மாலை 5.15 மணிக்கே கு.எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. ஊறல் வைத்திருந்ததாக சொல்லப்படும் 2 பேரல்களும் அன்றைய தினம் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். ஊறலே வைத்திருக்கவில்லை எனவும் அதனால்தான் பேரல் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. ஆய்வாளரது விசாரணையில் நான் ஆஜர் எதிரி 3 பிளாஸ்டிக் பாட்டில்களில் வெள்ளை நிற திரவம் சாராய வாடையுடன் வைத்திருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரி. மேற்படி 3 பிளாஸ்டிக் பாட்டில்களும் இந்த வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரி. சம்பவ இடத்திலிருந்து எதிரி, 2 நீல நிற பேரல்கள் ஆகியன காவல் துறையினரால் புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் சரி. அந்த புகைப்படம், குறுந்தகடு ஆகியன நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் முதல் தகவலறிக்கை பதிவு செய்த ஆய்வாளர் சம்பவ சமயத்தில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:35:31 +0530

எனது மேலதிகாரி என்றால் சரி. மேலதிகாரி கேட்டுக் கொண்டதன் பேரில் எதிரியை இந்த வழக்கில் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:35:42 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.133/2025

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்பாபு | Father's Name | : | ஜெயராமன் |
| Village | : | தஞ்சாவூர் | Taluk | : | தஞ்சாவூர் |
| Calling | : | | Age | : | 43 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 26th day of February 2026.**

**(Accused present).**

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க MP No.1, Dated 26.02.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண் 1182, நாள் 26.02.2026 ன்படி திரு செந்தில்பாபு அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் திரு K.கார்த்திகேயன் (Junior Scientific Officer) என்பவர் Remote Point Co-ordinator ஆக இருக்கிறார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:35:52 +0530

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் Junior Scientific Officer ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.09.2024 அன்று மேற்படி ஆய்வகத்தில் பணியிலிருந்தபோது திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலைய கு.எண் 473/2024 வழக்கு தொடர்பான திருத்துறைப்பூண்டி நீதித்துறை நடுவர் அவர்களின் CP No.145/2024, Dated 05.09.2024 ன்படி திருத்துறைப்பூண்டி காவல் நிலைய தலைமை காவலர் தனபாக்கியம் என்பவரால் வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று மாதிரிக்கு எடுத்த 500 மிலி திரவத்துடன் கூடிய 2 கண்ணாடி பாட்டில்களை பெற்று பாட்டில்களில் இருந்த திரவத்தை 10.09.2024 முதல் 11.09.2024 வரை பகுப்பாய்வு செய்ததில் மாதிரி 1ல் எத்தில் ஆல்கஹால், அமிலங்கள், எஸ்டர்கள், உயரின ஆல்கஹால்கள், ஆல்டிஹைடுகள் மற்றும் நச்சுப் பொருளான அட்ரோபின் 5.32 மி.கி. உள்ளன. இது அட்ரோபின் கலந்த சாராயமாகும். மாதிரி 2 ல் சாராய ஊறலில் தானாகவே உற்பத்தியான எத்தில் ஆல்கஹால், கிளிசரின், சர்க்கரை மற்றும் அமிலங்கள் கலந்துள்ளன. இதில் அட்ரோபின், மெத்தில் ஆல்கஹால் போன்ற நச்சுப் பொருட்கள் கண்டறியப்படவில்லை என பகுப்பாய்வு அறிக்கை தயார் செய்து அதை 20.09.2024 ல் திருத்துறைப்பூண்டி நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். T.No.2266 /

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:36:42 +0530

2024, TAN / PRO / 103 / 2024, Dated 11.09.2024 மேற்கண்ட அறிக்கையை பெண் தலைமை காவலர் அன்னபூரணி அவர்களிடம் ஒப்படைத்தேன். மேற்படி அறிக்கை

**அ.சா.ஆ.6**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் காணொலி வாயிலாக படித்து காட்டப்பட்டு விளக்கி கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு மின் அஞ்சல் மூலம் சாட்சியம் அனுப்பி வைக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:36:48 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.133/2025**

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr. பாபுவெங்கடேசசிவன் | Father's Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | திருத்துறைப்பூண்டி | Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Calling | : | | Age | : | 42 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 26th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 24.09.2024 அன்று பணியிலிருந்தபோது திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய கு.எண் 473/2024 வழக்கில் கைப்பற்றப்பட்ட பாண்டி சாராயத்திலிருந்து மாதிரிக்கு எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்ட அதன் அறிக்கையில் அமிலங்கள், எஸ்டர்கள், உயிரினங்கள் ஆல்கஹால் மற்றும் ஆல்டிஹைடுகள் கலந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:36:55 +0530

அந்த சாராயத்தை அருந்தினால் சில அறிகுறிகள் ஏற்படும். 1) நினைவு தவறி காணப்படுவார், 2) சரியான தீர்ப்புக்கு வர இயலாத நிலையில் இருப்பார், 3) மந்த நிலையில் இருப்பார், 4) கண்ணில் பாப்பா விரிந்து காணப்படும், 5) சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும், 6)எப்பொழுதும் தூக்க நிலையில் இருப்பார், 7) அதிகமாக அருந்தினால் மூலை, இருதயம், சிறுநீரகம் மற்றும் சுவாச உறுப்புகள் செயலிழக்க நேரிடும், 8) Volatile acid as Acetic acid 5.32% இச்சாராயத்தில் கலந்திருப்பதால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு இறக்க நேரிடும் என்று அந்த பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் கருத்து கூறி சான்று வழங்கினேன். நான் வழங்கிய அறிக்கை **அ.சா.ஆ.7**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.26 14:37:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.